" நிதிக் கோரிக்கை எண் 10—நிதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,42,18,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**(இ) நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,36,57,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரி வித்து கொள்ளுகிறேன்.

3. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம் மசோதாவை இப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

பி.ப. 1–57. பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

**பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.**